11 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

“ சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே. ”

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 20–2–33

நொள்ளைக் கண் பார்வை



‘இந்தியர்கள் காட்டு மிராண்டிகள்; அவர்களுக்கு சுயாட்சி தரலாகாது’ என்று சர்ச்சில் சொல்கின்றான். வட்ட மேஜை மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த ஸாப்ரூ, கேல்கர் பாத்ரோ உள்பட எல்லா இந்தியரும் சர்ச்சிலின் நொள்ளைக் கண்களுக்கு காட்டு மிராண்டிகளாகவே தோன்றுகின்றனர். அக்காட்சியை சாங்கி பிரபுவிடம் காட்டி, ‘இந்த அநாகரிக மக்களுக்கு ஏதும் தரலாகாது’ என்கிறான் சர்ச்சில். மிதவாதிகள் இந்த நற்சாக்ஷிப் பத்திரத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் ?

யார் காட்டு மிராண்டிகள்?

“இந்தியர்களில் பெரும்பாலோர் காட்டு மிராண்டிகளாவர். அந்த ஜாதிக்கு ஜன நாயக அரசியலைத் தருவது பைத்தியக்காரத் தனம். புதிய அரசியலை இந்தியாவுக்குத் தருவதென்று பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்திருப்பது மூடத்தனம். அந்த முயற்சியை ‘கன்ஸெர்வேடிவ்கள்’ பலமாய் எதிர்த்திருக்க வேண்டும்” என்று சர்ச்சில் என்ற தவளை சீமையில் கத்தியிருக்கிறது.

இந்தத் தவளையின் மூதாதையர், துணி என்பது இன்னதென்று அறியாது திரிந்த அந்தக் காலத்தில் இந்தியாவில் மஸ்லின் ஆடைகள் உற்பத்தியாகிக் கொண்டிருந்ததாகச் சரித்திரம் சொல்கின்றது. பிற்காலத்தில் இதே சர்ச்சிலின் மூதாதைகள் கூட இந்தியாவினின்று துணி தருவித்துக் கட்டித் திரிந்ததாகவும் இதிகாஸம் முறையிடுகின்றது. ஆனால் சர்ச்சிலின் கண்களுக்கு முன் தன் மூதாதையர் உருவமே இன்னும் தெரிவதால் இந்தியர்களை ‘காட்டு மிராண்டிகள்’ எனக் கூற அவர் நாக்கு துணிந்தது போலும்!

ஜனநாயகம், குடியரசு, ஸமதர்மம், பொது உடமை போன்று இக்காலத்தில் நவீன ராஜீய வாதிகளால் போற்றப்படும் சொற்கள் யாவும் ஆதிகாலத்திலேயே ஆர்ய வர்த்தத்தில் அமுலிலிருந்தவை. சர்ச்சிலின் மூதாதைகள் ரோம ராஜ்யத்தின் காலடியின் கீழ் நசுங்கிக் கிடந்த காலத்திலேயே இந்தியாவில் கபிலவாஸ்து போன்று எவ்வளவோ ஜன நாயகக் குடியரசுகள் இருந்ததாக பண்டை இலக்கியங்கள் பகர்கின்றன. சாணக்யன் ‘அர்த்த சாஸ்திரம்’ எழுதிக் கொண்டிருந்தான். வள்ளுவன் இராஜநீதியை வரைந்து கொண்டிருந்தான். இதையெல்லாம் சர்ச்சில் என்ற மண்டூகம் யாரையேனும் கேட்டாவது அறிந்து கொள்ளலாகாதா?

இந்தியர்களென்ற ‘காட்டு மிராண்டி’களிடத்தினின்று காசு பறிப்பதற்கு மட்டும் சர்ச்சில் கோஷ்டி பின் வாங்குவதில்லை. நிரந்தரமாக இந்தியாவைச் சுரண்டுவதற்கு ஏற்பாடு செய்வதிலும் ஓயமாட்டோமென்கிறார்கள். அந்தக் ‘காட்டு மிராண்டி’களிலிருந்து சிலரை இழுத்துக் கொண்டு போய் வட்ட மேஜைகளும் நடத்துகிறார்கள்; விருந்துகளும் தின்கிறார்கள். ஆயினும் சர்ச்சில், ‘காட்டு மிராண்டி’களைப் பற்றி ‘லெக்சர்’ அடிப்பதில் குறைய மாட்டேனென்கிறான்.

“காக்கை உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்த கதை’யாக பிரிட்டிஷார் இந்தியாவில் நுழைந்த அந்த சமயத்தில் நாட்டில் பிளவுகள் அதிகமாயிருந்த காரணத்தால் பாரத நாடு பிரிட்டிஷ் ஆட்சிக் குட்பட்டு விட்டது. தன் ஜாதியினர் ஆள்கின்றனர் என்ற அந்தத் திமிரின் காரணமாகவே இன்று சர்ச்சில் கண்டா கண்டபடி இந்தியர்களைத் தூஷிக்கின்றான். ஆனால் “காலம் போகும்; வார்த்தை நிற்கும்” என்ற முதுமொழியை சர்ச்சிலும் அவனைப் போன்ற திமிர் பிடித்த ‘கன்ஸெர்வேடிவ்களும்’ உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டிஷார் ஏதோ தந்துவிடப் போவதாகவும், அதைத் தாம் தடுக்கப்போவதாகவும் சர்ச்சில் தம்பட்ட மடிக்கிறான்; பிரிட்டிஷாரை இவன் குசாலாகத் தடுத்துக் கொள்ளட்டும்; பரவாயில்லை. ஆனால் இந்திய சுயராஜ்யக் கிளர்ச்சியை, பாரத மக்களின் தேசபக்தியை, சர்ச்சிலல்ல அவன் முப்பாட்டன் வந்தாலும் சரி, இனி தடுக்க முடியாதென்பதை அவன் உணர்ந்து கொள்வானாக! பிரிட்டிஷார் தரும் அரசியல் முன்னேற்றத் திட்டத்தை பிச்சை வாங்கிக் கொள்ள உண்மையான இந்தியனெவனும் தயாராயில்லை. ‘தன் கையே தனக்குதவி’ என்ற வாக்கியத்தைக் கடைப் பிடித்து இந்தியத் தாயின் வீரக் குழந்தைகள் தேசத் தொண்டு செய்யத் தலைப்பட்டு விட்டன. இந்தக் ‘காட்டு மிராண்டிகள்’ ஆண்டவனருளால் சிக்கிரத்தில் சுதந்திரம் அடைவார்களென்றே உலகம் எதிர் நோக்குகின்றது. அப்போது இந்தியாவில் நடக்கப் போகும் அரசியலைக் கண்டு உலகமே பிரமிக்கப் போகின்றது. காலம் மட்டும் கூடி வரவில்லையே என்று தேச பக்தர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஸைடன் ஹாம் பிரபுவைப் போல் அற்பாயுளில் சாகாமல் இந்த ‘நாகரிக’ சர்ச்சில் உயிரோடிருப்பானயின் இந்தியக் ‘காட்டு மிராண்டி’களின் சுயராஜ்ய அரசியலைக் காண்பானென்றே நினைக்கின்றோம். அதைக் கண்டால் இவனுக்கு வயிறு வெடித்துப் போகாமல் இருக்க வேண்டுமே என்று தான் அஞ்சுகிறோம்.

“ கபாட சப்தஹ கிம் ? ”

பெரிய சமுஸ்கிருத வித்வான். புத்தகங்களைக் கரைத்துக் குடித்தவர். வழக்கத்துக்கு விரோதமாக அவரிடம் ஏராளமாக செல்வமும் இருந்தது. ஒரு நாள் இரவு அவர் ஏதோ காவியத்தைப் படித்துக் கொண்டிருந்த போது கொல்லைக் கதவு திறக்கப்படுவது போல சத்தம் கேட்டது. உடனே சமுஸ்கிருத வித்வான், “கபாட சப்தஹ கிம்?” அதாவது “கதவண்டை என்ன சத்தம்?” என்று கேட்டார். உடனே அந்த இடத்திலிருந்து ‘சோ’ என்று ஓர் குரல் வந்தது.

‘சோ’ என்றால் என்ன அர்த்தமென்று வித்வானுக்குப் புரியவில்லை. அமரம், நிகண்டு எல்லாவற்றையும் புரட்ட ஆரம்பித்தார். அவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது இன்னொரு ஆள் உள்ளே அவரது பெட்டியண்டை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்.

வேண்டியதை யெல்லாம் மூட்டை கட்டி எடுத்துக்கொள்ள ஒரு நாழிகை நேரம் பிடித்தது. பண்டிதருக்கு அத்தனை நாழிகை யாகியும் ‘சோ’ என்ற பதத்துக்கு அர்த்தம் கிடைக்கவில்லை. மறுபடியும் கொல்லைக் கதவு சத்தம் கேட்டது. உடனே வித்வான், “கபாட சப்தஹ புனஹ கிம்?” அதாவது “மறுபடியும் கதவண்டை என்ன சப்தம்?” என்று கேட்டார். “ரஹ” என்ற பதிலைக் கொடுத்து விட்டு மூட்டை யடித்தவன் நழுவி விட்டான்.

பண்டிதர் யோசித்தார். “இப்போது அர்த்தம் கண்டு பிடிக்க இன்னுமொரு வார்த்தை கிடைத்திருக்கிறது; (1) சோ (2) ரஹ என்று அவர் எண்ணினார். திடீரென்று ஞானோதயம்! ‘சோரஹ’ என்றால் ‘திருடன்’ என்றல்லவோ அர்த்தம். உள்ளே ஓடிப் போய்ப் பார்த்தார். ‘சோரஹ’வுக்கு அர்த்தம் ‘கைமேல் கனி’ போல விளங்கி விட்டது. இப்படிக் கோட்டை விட்டாராம் ஓர் பண்டிதர்.

சென்னையில் வலங்கிமான் சாஸ்திரியும், சிவஸ்வாமி அய்யரும் சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார்கள். பிரிட்டிஷார் காந்திஜியை விடுதலை செய்ய வேண்டு மென்றும், வட்ட மேஜை முடிவுகள் பயனற்றவை யென்றும் சொன் மாரி பொழிந்தனர். இவ்வளவு நாளாயிற்று இந்தப் பண்டிதர்களுக்கு விஷயம் புரிவதற்கு! ‘ஐக்கிய அரசியல்’ என்ற பதம் தோன்றியபோது அதைப்பற்றி வீசைக் கணக்கில் பேசினார்கள். ‘பாது காப்புகள்’ என்ற பதம் வந்த போது “இந்தியாவின் நலத்தைக் கோரிய பாதுகாப்புகள்” என்று வியாக்யானம் செய்து அதைப் பற்றி மணங்குக் கணக்கில் பேசினார்கள். இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் போது ‘ஜான் புல் இந்தியர்களுக்கு பட்டை நாமம் வைத்து விட்டான்’ என்று அறிந்து கொண்டு ஏங்குகின்றார்கள். ஐயோ பாவம்!

உள்ளே லொட லொட்டை!

‘ஐக்கிய அரசியல் திட்டம்’ என்பது வெறும் லொட லொட்டை என்பதை நாமறிவோம். ஆனால் இந்தத் திட்டத்தை சிலர் வானமளாவப் புகழ்ந்தனர். இந்த அரசியலில் சுதேச சமஸ்தானங்களும் சேர வேண்டு மெனக் கூறினர். சமீபத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்கு சட்ட நிபுணராக உள்ள ஸர் ஸி. பி. ராமசாமி என்பாரும், “தேச மக்களுக்கு நன்மை பயப்பதாக ஐக்கிய அரசியல் ஏற்பட்டால் முதன் முதலில் திருவிதாங்கூர் சமஸ்தானம் அதில் கலந்து கொள்ளும்” என்று அபிப்பிராயம் தந்திருக்கிறார்.

ஆனால் சீமையில் நமது சுதேச சமஸ்தானங்களிடம் மிகவும் அன்புடையவர்கள் போல நடிக்கும் சில ஆஷாடபூதிகள் தோன்றியிருக்கின்றனர். ஆத்தாள் பிரபு, டர்ன்ஹாம் பிரபு முதலிய சில பிரபுக்கள் ஓர் அறிக்கையை விடுத்திருக்கின்றனர். “ஐக்கிய அரசியல் திட்டத்தில் சுதேச சமஸ்தானங்கள் கட்டாயமாகச் சேர வேண்டுமென வற்புறுத்துவது அநியாயமாகும்” என்று அவ்வறிக்கையில் கரைந்து கூறியிருக்கின்றனர். எந்த சுதேச சமஸ்தானங்கள் இந்த வெள்ளைப் பிரபுக்களுக்கு வக்காலத்து தந்தனவோ? ஏன் இந்த பிரபுக்கள் சம்மனின்றி ஆஜராகின்றனர்? குழந்தையைப் பெற்றவளை விடத் தனக்கு அதனிடம் அதிகப் பிரியம் இருப்பதாக எவளாவது சொன்னால் அவளை நம்ப முடியுமா? அந்த வேஷதாரிகள் போலவே சீமையில் சில ஆஷாடபூதிகள் பேசுகின்றனர். ஆகவே ‘ஐக்கிய அரசியல்’ திட்டத்தின் உள்ளே பார்த்தால் அது லொட லொட்டையாக இருக்கிறது. அதைப் புகழ்கின்றவர்களும் சுத்த லொட லொட்டை! அதில் சுதேச சமஸ்தானங்களும் சேருவதா என்று கூறுகின்றவர்களும் லொட லொட்டையாக இருக்கின்றனர். இப்படி சமயத்திற்குத் தக்கபடி வேஷம் போடுவது தான் ராஜீயமோ?

கொண்டைக்கு பூ வேண்டுமோ?

லண்டனில் 'இந்தியா ஹவுஸ்' என்று ஒரு கட்டிடம் இருக்கின்றது. அதில் தான் இந்தியா மந்திரி என்ற உத்தியோகஸ்தர் கொலுவீற்றிருக்கின்றார். இந்தியா மந்திரி என்ற உத்தியோகம், பிரிட்டிஷ் காபினெட்டில் ஓர் உத்தியோகமாகும்; அந்த உத்தியோகஸ்தரின் காரியாலயச் செலவுகளை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு கவனித்துக் கொள்வது நியாயமே யன்றி இந்தியா தலையில் கை வைப்பது எதேச்சாதிகாரமென்றே தோன்றுகிறது. 'இந்தியா ஹவுஸ்' என்ற கட்டிடத்திற்கு அலங்காரம் செய்வதற்காக 1913 பவுன்கள் இந்தியப் பணத்தினின்று கொடுக்கப் பட்டிருப்பதாக டெல்லி முத்தன்று சபையில் அன்று பேர்சு வந்தது. இந்த 1913 பவுனும் யார் பணம்? ஏழை இந்தியனிடம் வசூலித்த வரிப் பணமன்றோ!

இந்தியனை இன்று பிடித்துள்ள வறுமை நோய் பொல்லாததா யிருக்கின்றது. ஆனால் அதே சமயத்தில் அவனை ஆளும் காரியாலயமென்று சிமையில் உள்ள ஓர் கட்டிடம் அலங்காரம் செய்யப்படுகின்றது. 'குடல் கூழுக்கழும் போது கொண்டைக்கு பூ வேண்டுமோ?' என்ற பழமொழியே இச்சமயத்தில் நம் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்தியாவுக்குப் புதிய அரசியல் எவ்வாறிருக்க வேண்டுமென்பது பற்றி அநேக இந்திய அறிஞர்கள் 'கான்ஸ்டிடியூஷன் புத்தகங்கள்' எழுதி யிருக்கின்றனர். அந்நூல்களில் இந்தியா மந்திரி என்ற உத்யோகமும், 'இந்தியா ஹவுஸ்' என்ற கட்டிடமும் இந்தியருக்கு இனி தேவையில்லை, அவை இருக்கவும் கூடாது என்று அபிப்பிராயப் படுகின்றனர். இந்த அபிப்பிராயத்தை அறிந்த பின்னரும் 'இந்தியா ஹவுஸ்'க்கு அலங்காரம் செய்வதற்காக 1913 பவுன் செலவழிப்ப தென்றால் என்ன அர்த்தம்? 'இந்தியா ஹவுஸ்' சிமையில் அலங்காரமாயிருப்பதால் ஏழை இந்தியனுக்கு என்ன லாபம்! கண் காட்சியாகக் காண்பதற்குக் கூட பிரயோசன மில்லையே. புதிய டெல்லி கட்டிடங்களில் ஏராளமாக இந்தியப் பணத்தை வியர்த்தமாக்கியது போலவே இப்போது இந்தியா ஹவுஸின் மேல் 1913 பவுன் பெறுமான சுண்ணாம்பையும், கண்ணாடியையும் கொட்டிக் காசை வியர்த்தமாக்கி யிருக்கிறார்கள். மீண்டும் கேட்கிறோம், "குடலுக்குக் கூழில்லை; கொண்டைக்குப் புஷ்பமா?"

நன்றி மறக்கும் பாவம்

நன்றி மறப்பதை விட பெரிய பாவம் வேறெதுவுமில்லை. "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு" என்பது வள்ளுவர் வாக்கு. ஆனால் தலைகிழ் நியாயத்திலேயே புரளும் பிரிட்டிஷ் சர்க்கார் இவ் விஷயத்தில் மட்டும் என்னமாக நேர்மையுடன் நடந்து கொள்ளும்? பிரிட்டனுக்கு இந்தியா செய்த நன்றிகளுக்குக் கணக்குண்டா? ஆனால் அவை யாவற்றிலும் மிக முக்கியமானவற்றில் அன்று மகா யுத்தத்தில் இந்தியாவின் சிப்பாய்கள் தலையைக்கொடுத்தும், இரத்தத்தைச் சிந்தியும் இங்கிலாந்திற்குத் துணை புரிந்து அதற்கு வெற்றி கிட்டுமாறு செய்தது ஒன்று. அந்த உதவி தனக்குக் கிடைக்காம லிருந்திருந்தால் இன்று தனது நிலை என்னவாறிருக்கும் என்பதைப் பிரிட்டன் எண்ணிப் பார்க்கட்டும்.

அந்த யுத்தத்தில் கை, கால்களை யிழந்து சக்தி யற்றுப் போன இந்தியர்கள் தொகை $4\frac{1}{2}$ லக்ஷம் பேர்களாம். இதில் $1\frac{1}{2}$ லட்சம் பேர்களுக்கே துரைத்தனம் பொருளுதவி செய்து வருகின்றது. மற்றவர்களுடைய கதி என்ன? பிரிட்டனுக்காகக் கை கால்களை உடைத்துக் கொண்ட அவர்கள் வயிற்றில் ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு மடிய வேண்டியதுதானா? யுத்தத்தில் தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்கள் எவ்வாறு வயிறு வளர்ப்பது? இறந்தவர்களுக்காக கல்லில் கட்டப்பட்ட ஞாபகச் சின்னங்கள் வயிற்றுக்குச் சோறு போட்டு விடுமா? இவ்விஷயங்கள் சமீபத்தில் டில்லி சட்ட சபையில் சொல்லப்பட்டன. அப்பொழுது ராணுவக் காரியதரிசி யளித்த பதில், மாஜி சிப்பாய்களைத் திருப்தி படுத்துவதாகவில்லை. அங்கத்தினர்களின் வற்புறுத்தலின் பேரில் மேற்படி காரியதரிசி இவ்விஷயத்தை மிகுந்த அனுதாபத்துடன் கவனிப்பதாக வாக்களித்தார்.

"எட்டுச் சுரைக்காய் அநுதாபமும், சர்க்கரை வாய் அநுதாபமும் தேவையில்லை, அநுதாபத்தைச் செய்கையில் காட்டட்டும்" என்று மாஜி இந்திய சிப்பாய்கள் சொல்கின்றனர்.

காந்திஜி அருள் வாக்கு

"தீண்டாமை விலக்கு விஷயமாக நான் மீண்டும் ஒரு முறை உபவாச மிருப்பே னென்று நிச்சயமாகச் சொல்லி விடுவதற்கில்லை. அப்படியே உபவாச விரதத்தை நான் ஏற்க வேண்டுமோயின் ஆண்டவனுடைய ஆக்ஞை அதாவது சத்தியத்தினுடைய கட்டளை முதலில் வந்தாக வேண்டும். உலகம் முழுவதையும் சந்தோஷப்படுத்தும் காரியமாயினும் அதற்காக கடவுளுக்கு துரோகம் செய்ய எப்போதும் இணங்கேன். இந்தத் தீண்டாமையை ஒழித்தே தீரவேண்டு மென என்னையு மறியாமலே ஓர் வேகம் எனக்கு ஏற்பட்டுளது. ஆனல் அக்காரியத்தை ஒரு மனிதனுல் செய்ய இயலாது. ஆனல் இவ்வளவு காலம் தீண்டாமை இருக்குமாறு பார்த்துக் கொண்டிருந்த பகவான் அதை ஒரே நொடியில் அழித்துத் தீர்ப்பான்" என்று காந்திஜி "ஹரிஜனி"ல் எழுதி யுள்ளார்.

* * * *

"பம்பாய்த் தீர்மானங்களின்படி பார்த்தால் கூட ரங்கய்யரின் மசோதாக்களுக்கு அவசியமே யில்லை. சட்ட சபை மூலமாக கோயில் பிரவேசத்தை சாதித்து, நிர்ப்பந்தத்தை உபயோகிக்கக் கூடாது. மன மாற்றமே நாட்டின் தேவை" என்று மாளவியாஜி காந்திஜிக்கு எழுதினர். அதற்கு காந்திஜி பதில் எழுதியிருப்பதாவது:

"எனது மூத்த சகோதரரான மாளவியாவுக்கும் எனக்கும் வித்தியாசமான கருத்துக்களுண்டு. ஆயினும் எங்களன்பு குறையவில்லை. பம்பாய்த் தீர்மானத்திற்கு ஒரே அர்த்தம் தான் கொள்ள முடியும். அதன்படி சட்டத்தின் மூலமாகவே நாம் அடையக்கூடிய அனுகூலங்களை ஜாதி ஹிந்துக்கள் ஹரி ஜனங்களுக்கு வாங்கிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். டாக்டர் அம்பேத்கருக்கும், அவரைப் போன்ற படித்த ஹரி ஜனங்களுக்கும் மட்டுமின்றி, வாயில்லாப் பூச்சிகளாகக் கிடக்கும் 40 லக்ஷம் மக்களுக்கும் நாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பதில் நமக்கு உதவி புரியுமாறு நாம் டில்லி சபையிலுள்ள எல்லா ஹிந்து அங்கத்தினர்களையும் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கோயில் பிரவேசத்திற்கு முட்டுக் கட்டையாக விருக்கும் கோர்ட்டுத் தடையைச் சட்டத்தாலன்றி வேறு எவ்வித ஒப்பந்தங்களாலும் நாம் நிவர்த்திக்கவே முடியாது. மசோதாக்களில் நிர்ப்பந்தம் எதுவுமே யில்லை. இஷ்டப்பட்டால் கோயில் பிரவேசத்தை அனுமதிக்கும்படியே அவை கூறுகின்றன."

உடன் கட்டை ஏறுதலும், தீண்டாமையும்

"தீண்டாமை என்ற தீங்கைச் சட்டத்தின் துணையைக் கொண்டு மாத்திரம் போக்கிவிடுவ தென்பது மிகவும் கஷ்டமான காரியம்" என்று "நியூஸ் கிரானிகிள்" என்ற பத்திரிகையில் ஒரு மேனாட்டவர் எழுதியதை ஒரு நிருபர் மகாத்மாவிடம் காட்டி அபிப்பிராயம் கேட்ட போது அவர் கூறியதாவது:

ரங்கய்யரின் இரண்டு மசோதாக்களிலும் நிர்ப்பந்த மென்பதே இல்லை என்பதை உணர இந்தியரிலேயே பலர் பிடிவாதமாக மறுத்து வருகையில், மேற்படி வியாச மெழுதியவரின் அறியாமையைக் கண்டு நான் ஆச்சரியப்படவேயில்லை. சட்ட மூலம் தீண்டாமையையொழித்துவிட ஒரு மசோதா கொண்டுவரப்பட்டால், நான் அப்பொழுது ஏற்படும் கஷ்டங்களை உணர முடியும். ஆனல் இப்பொழுதோ ஏற்கனவேயுள்ள சட்டத் தடைகளை நீக்கவே முயற்சிக்கப் படுகின்றது.

"சதி அல்லது உடன் கட்டை யேறுதல் என்ற முறையை ரத்து செய்யும்படியான நிர்ப்பந்தம் சர்க்காருக்கு ஜீவகாருண்யம் காரணமாக ஏற்பட்டதென்றும், அதே மாதிரியான ஜீவகாருண்யத்தைக் காட்டியே அவர்கள் தீண்டாமையை ஒழிக்க முற்பட வேண்டுமா?" என்றும் அக்கட்டுரையாளர் கேட்டிருக்கிறார். 'சதி'யை யொழிக்கச் செய்யப்பட்ட சட்டத்தை, தற்பொழுதுள்ள மசோதாக்களுடன் ஒப்பிடுவது தவறானதாகும். 'உடன் கட்டை யேறுவதை' பீனல் கோட் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக சர்க்கார் கருதியது. ஆனல் தீண்டாமையையோ அது சட்ட பூர்வமாக அனுமதித்திருக்கிறது. சீர்திருத்தத்திற்குப் பொதுஜன வாக்கு பழுத்துப் பக்க பலமாக விருக்கையில் அதை நிறை வேற்றி வைக்கவே துரைத்தனத்தார் சிரமப்படி கடமைப் பட்டிருக்கின்றனர். சீர்திருத்தக்காரர்களின் நிலைமை மிகவும் சரியான தென்பதைப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் உணர வேண்டும். மசோதாக்களை நிறைவேற்ற மறுத்தால் அது சீர்திருத்தக்கைத் தடை செய்வதாகும்."

கசக்கும் 'சீனு கல்கண்டு'

மலிவான ஜப்பான் நூல் இந்தியாவிற்குள் தலை காட்டி உள் நாட்டு சுதேசித் துணித் தொழிலை அழித்து வருவது போதாதா? மலிவாக கல்கண்டுக் கட்டிகளையும் அது இங்கு கொண்டு வந்து தள்ளிக் கொண்டிருக்கிறது. (உண்மையாக ஜப்பானிலிருந்தே வந்திறங்கும் இந்தக் கல்கண்டைத் தவறாக நாம் 'சீனு கல்கண்டு' என அழைத்து வருகிறோம்). இந்தியாவில் ஏராளமான கற்கண்டு தயாரிக்கப்படுகின்றது. இந்தக் கற்கண்டின் விலை சமீப காலமாக மணங்கு 15 ரூபாயிலிருந்து 11 ரூபாய்க்கு இறங்கி விட்டது. இதற்குக் காரணமென்ன என்று வியாபாரிகள் பரிசிலனை செய்ததில் ஜப்பான் கற்கண்டு ரொம்பவும் மலிவாக இந் நாட்டிற்குள் நுழைந்து விட்டதுதான் என்று தெரிய வந்தது.

ஜப்பானிய நாணயத்தின் மதிப்பு குறைந்து விட்டதால் பரிவர்த்தனை விகிதத்திலும் குறைவேற்பட்டு விட்டது. ஆகவே தன் சரக்குகளில் பலவற்றை இந்தியாவிற்குக் கொண்டு வந்து மிகவும் குறைந்த விலைக்கு இந்தியர்களின் தலை மீது கட்டி ஏராளமாகப் பணம் குவிக்க ஜப்பானுல் முடிகின்றது.

ஜப்பானியக் கற்கண்டுடன் இந்தியக் கற்கண்டு போட்டி போட முடியவில்லை. ஆகவே தங்களுக்குப் பெருத்த நஷ்டங்களேற்படுவதாக கற்கண்டு வியாபாரிகள் கூக்குரலிடத் தொடங்கி விட்டார்கள். "இந்திய மார்க்கெட்டில் ஜப்பானியக் கற்கண்டு வந்து குவியாமலிருக்க உடனே அதற்கு அதிகமான இறக்குமதி வரி விதித்துத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்" என்று இந்திய சர்க்கரை சங்கத்தினர் இந்தியா கவர்ன்மெண்டின் வியாபார இலாகா தலைவருக்கு எழுதி யிருக்கிறார்கள். இந்த நியாயமான கோரிக்கைக்குப் பொறுப்பை உணரும் எந்தச் சர்க்காரும் இணங்கியே தீர வேண்டும். இவ் விஷயத்தில் இந்தியத் துரைத்தனம் இந்திய வியாபாரிகளைக் காக்க உடனே முற்படுமா என்பதைப் பொறுத்தே பார்க்க வேண்டும். பொது ஜனங்களுக்கு ஒரு வார்த்தை! நாக்கு சம்பந்தப்பட்ட வரையில் சீனு கல்கண்டு ருசிக்கலாம். ஆனல் தேசத்தோடு சம்பந்தப்படுத்திப் பார்த்தால் சீனு கல்கண்டு கசக்கின்றது என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

"வேலை யில்லை—திருடினேன்"

19 வயதான அந்தோனி என்ற வாலிபன் கூனூர் மாஜிஸ்திரேட் முன் நிறுத்தப்பட்டான். ஒருவரது நகைகளைத் திருடியதாக அவன் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. "திருடினது வாஸ்தவம் தானு?" என்று மாஜிஸ்திரேட் அவனைக் கேட்டார். "ஆமாம், திருடினேன். பல மாதங்களாக வேலைக்கு அலைந்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. வயிற்றை வளர்க்கத் திருடுவதை விட வேறு மார்க்கமில்லை எனக் கண்டே அவ்வாறு செய்தேன்" என்று வாலிபன் பதிலளித்தான். இவ்வளவையும் கேட்ட காருண்ய (?) மாஜிஸ்திரேட் அவனுக்கு 6 அடி கொடுக்குமாறு உத்தர விட்டார். வாரமொரு முறை கோர்ட்டுக்கு வந்து போகுமாறும், தாம் வேலை தேடிக் கொடுப்பதாகவும் அவர் கூறினாராம். இந்நாட்டில் வேலை யில்லாத் தவிப்பு எவ்வளவு கோரமாக விருந்து வருகிறதென்பதற்கு இந்தச் சம்பவம் போதாதா? அந்தத் தவிப்பை நீக்க ஏதும் வழி தேடாமல் சர்க்கார் உறங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தோனியைத் திருடுமாறு மனம் தூண்ட வயிற்றில் எவ்வளவு கொடுமையான பசி ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி ஒவ்வொருவரையும் வேண்டுகின்றோம்.

உலகிலுள்ள இதர அரசாங்கங்கள் வேலை கிடைக்காத கஷ்டத்தை யொழிக்க எவ்வளவோ பாடுபடுகின்றன; உள் நாட்டுத் தொழில்களை வளர்த்துப் பலருக்கு வேலை கொடுக்கின்றன. அப்படிச் செய்யத் தவறும் துரைத்தனங்களைக் கன்னத்தி லறைய சட்ட சபைகள் முனைகின்றன. வேலை யில்லாப் பிரச்னையை செவ்வையாகத் தீர்க்கவில்லை என்பதற்காகத்தானே அன்று திரு. லான்ஸ்பரி சீமை காமன்ஸ் சபையில் சர்க்கார் மீது கண்டனத் தீர்மானம் பிரேரித்தார். உரிமை யிழந்து தவிக்கும் பாரதத் தாய், தன் வயிற்றிலுதித்த மக்களில் லக்ஷக் கணக்கானவர்கள் வேலை கிடைக்காமல், பட்டினி கிடந்து, பிறகு அதையும் சகிக்க முடியாமல் திருடிவிட்டு, பிரம்படி வாங்குவதையும், அல்லது தற்கொலைகள் புரிந்து கொள்வதையும் கண்டு பிரலாபிக்காமல் வேறென்ன செய்ய முடியும்?

போச்சு குப்பைத் தொட்டிக்கு !

தீர்வையைச் செலுத்த வழியின்றி நெல்லுக் குவியலைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான் விவசாயி ! ஆனால் அறிக்கைக்கு மேல் அறிக்கைகள் பறக்கின்றன. ஏங்கி நிற்கும் ஏழை விவசாயிக்கு அரசாங்க அறிக்கைகளும், புள்ளி விவரங்களும், வாதங்களும் ஆறுதல் தருவனவோ ? அழுகின்ற குழந்தைக்கு வாழைப்பழத் தோலியை நீட்டுவது போல சென்னைத் துரைத்தனம் தீர்வை சம்பந்தமாக ஓர் அர்த்தமற்ற, உதவாக்கரையான அறிக்கையை சமீபத்தில்விட்டிருக்கிறது.

“சென்னை சட்ட சபைத் தீர்மானப்படி 12½% தீர்வையைக் குறைத்தால் ஒவ்வொரு விவசாயிக்கும் 1 ரூபாய்க்கு 2 அணா தானே குறையும் ; இந்த சொற்ப குறைவால் அவர்களுக்கு பிரமாத லாபமில்லை” என்று அவ்வறிக்கையில் ஊறி யிருக்கிறது. ஏழைக்குத் தகுந்த எள்ளுருண்டை ! ஏழை விவசாயிக்கு காலணா கிடைத்தாலும் அது புதையல் கிடைத்த மாதிரி. ஆனால் நிலவரி, நீர்வரி, வருமான வரி, லைசென்ஸ் வரி, உப்பு வரி என்று வருமானம் மிகுந்த அரசாங்கத்துக்கோ சில லக்ஷ ரூபாய்கள் குறைவதால் வானம் இடிந்து விழுந்து விடாது.

ஆங்கில நாட்டுச் சரித்திரத்தில் “மார்ட்டின் பாக்கு வெட்டி” என்று ஓர் ஏற்பாடு வருணிக்கப்பட்டுளது. “ஏழைகளுக்கு பணம் இருக்கலாகாது. ஆகையால் அவர்கள் தங்கள் வருமானத்தை யெல்லாம் சர்க்காருக்கு கொடுத்து விட வேண்டும். பணக்காரர்களுக்கு இவ்வளவு பணம் இருப்பானேன் ? அவர்களும் தங்கள் பணங்களை சர்க்காருக்கே தந்து விட வேண்டும்” என்று ஒரு மதி மந்திரி உத்தரவு போட்டானாம். அதன் போட்டோ படம் இப்போது இந்தியாவில் அமுலுக்கு வரப் பார்க்கின்றது. முதலாளி அதிக வருமானமடைந்தால் வருமான வரியை வைத்துத் தாக்கி சர்க்கார் பணம் சேர்க்கிறது. ‘ஏழை விவசாயிக்கு இரண்டணா குறைவானேன் அதையும் எங்களிடம் கொடுத்து விடட்டும்’ என்று சென்னை சர்க்கார் இப்போது சொல்லியிருக்கிறது.

சட்ட சபையின் தீர்மானம் குப்பைத் தொட்டியை அடைந்து விட்டதே, இப்போது அத்தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் இனி என்ன செய்யப் போகிறார்கள் ?

பித்தம் பிடித்த தீர்மானம்

பிரிக்கன் பேஜ்கிராப்ட் என்ற பிரகஸ்பதி பார்லிமெண்டில் ஓர் தீர்மானம் கொண்டு வரப் போகின்றாராம். “இந்தியாவுக்கு மத்தியப் பொறுப்பாட்சி தருவதால் 35 கோடி மக்களுக்கு பேராபத்து ஏற்படப் போகின்றது. அது மட்டுமன்று, தங்களுடைய சோற்றுக்கு இந்தியாவே கதியென நம்பிக் கிடக்கும் பல பிரிட்டிஷாருக்கும் கஷ்டமே. ஆகவே இந்தியாவுக்கு பொறுப்பாட்சி கொடுக்கலாகாது” என்பது அவரது தீர்மானத்தின் சாரமாகும்.

பிரிட்டிஷார் அத்தனை பேருக்கும் வருகின்ற மொத்த வருமானத்தில் ஐந்திலொரு பங்கு இந்தியாவினின்று கிடைப்பதென்பது அநேகர் ஒப்புக் கொண்டிருக்கும் விஷயம். தூங்குகிறவன் தொடையில் எவ்வளவு காலம் கயிறு திரிக்கலாம் ? அவன் விழித்துக் கொண்டால் என்ன செய்வது ? தூங்கிக் கொண்டிருந்த இந்தியாவினின்று வடிமடை திறந்த காலம் மலையேறிப் போய் விட்டது. இந்தியா விழிப்படைந்து விட்டதென்பதை பிரிக்கன் பேஜ்கிராப்டு அறிந்து கொள்ளட்டும். மத்தியப் பொறுப்பாட்சியாவது உருளைக் கிழங்காவது, எது கிடைத்தாலும் சரி, கிடைக்கா விட்டாலும் சரி இந்தியாவினின்று பணம் போவதைத் தடுத்தே தீர்வதென இந்தியர் உறுதி கொண்டு விட்டனர்.

பிச்சைக்காரர் தொல்லை

மங்களூரில் கத்தோலிக்க கிறிஸ்தவப் பாதிரிகள் ஒரு அரிய சேவையில் ஈடுபட்டிருக்கின்றனர். கை கால் முடமாகி, கண் குருடாகி, வேறு வழியின்றி பிச்சையெடுத்தே ஜீவிக்க வேண்டியவர்களுக்கென்று தர்மம் செய்வதற்காக ஓர் ‘ஸ்தாபனம்’ ஏற்படுத்தியிருக்கின்றனர். தெருக்களில் பிச்சைக்காரர்களின் தொல்லையை நீக்கவும், பாத்திர மறிந்து பிச்சை கொடுப்பதற்குமே இந்த ‘ஸ்தாபனம்’ பாடுபடும். மேற்படி சங்கத்தாருக்கு ஊரில் அநேகர் மொத்தப் பணமாகக் கொடுப்பதென்றும் ஏற்பாடாகி யிருக்கிறது. இந்த மாதிரி ‘ஸ்தாபனங்களை’ தென்னிந்தியாவில் ஒவ்வொரு நகரத்திலும் சிருட்டிக்க இதர ஜாதிப் பெரியார்களும் முயலவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

நமது கிளிஞ்சல் குவியல்

தஞ்சைக் கடுத்த கண்டியூரில் வரி கொடுக்க வேண்டாமென்ற துண்டுப்பிரசுரத்தை வழங்கிய இராமனாதன் என்பவருக்கு ஆறு மாதம்.

மதுரைச் சிறையில் அசுத்தமான ஆகாரம் கொடுபடுவதை முன்னிட்டு ஸ்ரீமதி சுப்பு லக்ஷ்மி மூன்று நாட்களாக உண்ணா விரத மிருக்கிறாளாம்.

மதுரையில் ஸ்ரீமதி பர்வதவர்த்தனி அம் மாளுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகைக் காக அவரது கணவரின் சொத்து ஜப்தி.

கள்ளிக்கோட்டையில் விதேசி ஜவுளிக் கடையில் மறியல் செய்த நால்வர் கைது செய் யப்பட்டு, சாயந்திரம் விடுவிக்கப் பட்டனர்.

பெங்களூரில் "நவஜீவன் பிரஸ்" சோதனை யிட்டு 'கர்நாடகத்தில் வரி கொடாமை" யென்ற புத்தகத்தைப் பறிமுதல் செய்தனர். 'இந்தியா பிரஸ்ஸூம்' சோதனை யிடப்பட்டது.

பாபட்லாவில் சுயேச்சை தினத்தன்று கைதி யானவர்களில் ஒருவருக்கு 6 மாதமும், மற் றொருவருக்கு 3 மாதமும் தண்டனை.

பல்லாரியில் ஒருவர் "லக்ஷ்மி பிரஸ்" என்ற அச்சுக்கூடம் வைப்பதற்காக அனுமதி கோரிய பொழுது அவர் காங்கிரஸ்காரரென்றும், ரூ. 500 ஜாமீன் கட்ட வேண்டு மென்றும் உத் திரவு வந்ததாம்.

பம்பாய் சௌபாத்தி கடற் கரையில் காங்கி ரஸ் பிரசுரம் வெளி வரும் சம்பந்தமாக ஒரு வீட்டைச் சோதனை யிட்டு, அனேக பிரசுரங் களையும் பறிமுதல் செய்து 6 பேரைக் கைது செய்தனர். சட்ட விரோதமான துண்டுப் பிரசுரம் வழங்கிக் கொண்டிருந்த ஒருவரிட மிருந்து 1200 காப்பிகளையும் பறிமுதல் செய்து விட்டனர்.

லக்ஷ்மணபுரி அமீனாபாத்தில் காங்கிரஸ் புத் தகங்களை வழங்கிக் கொண்டிருக்கையில் ஒரு வர் கைதியானார். ஜில்லா மகா நாடு கூட்டிய தற்காக கைது செய்யப்பட்ட 13 பேர்களுக்கு தலா ஒரு வருஷம் தண்டனை.

அலகாபாத்தில் கிரிமினல் லா சட்டப்படி 13 ஸ்திரிகளுக்கும், 11 ஆடவர்களுக்கும் 6 மாதம் கடுங்காவல்.

ஆமதாபாத் மில் ஏஜெண்டான சேத் அம்பா லால் சாராபாயின் குமாரியான ஸ்ரீமதி மிரு துளா தேவியை மார்ச்சு மாதம் 3உ வரையில் சிறையில் வைக்கும்படி உத்திரவு.

தோஹத்தில் கலெக்டர் தர்பார் நடத்திய போது அங்கு காங்கிரஸ் பிரசுரங்களை வழங்கிய தற்காக பஞ்சமஹால் 60-வது சர்வாதிகாரி யான ஒரு ஸ்திரீ கைது செய்யப்பட்டார்.

கல்கத்தா கார்ப்பொரேஷன் விளம்பர அதி காரியான ஞானாஞ்சன் நியோகி கைது செய்யப் பட்டார். அவர் வீடும் சோதனை யிடப்பட்டது.

குன்னூரில் தாழ்ந்த வகுப்பினருக்கான ஸ்ரீ ஆனந்த விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் அடுத்த மாதம் நடக்கும்.

இனி ஜப்பானியத் துணிகளை சீனாக்காரர்கள் வரவழைப்பது மில்லை, விற்பது மில்லை யென தீர்மானித்து, மூட்டை கட்டி விட்டனர்.

பம்பாய் சவுக்கடி மசோதாவைத் திருத்தி யமைக்கும்படி இந்திய வியாபார சம்மேளனத் தார் சர்க்காரோடு கடிதப் போக்கு வரத்து செய்து வருகின்றனர்.

மதுரையில் விதேசி ஜவுளிக் கடைகளில் மறியல் செய்த 3 தொண்டர்களைக் கைது செய்து, பிறகு விடுவித்து விட்டனர்.

ஆலயப் பிரவேச மசோதாக்கள் விஷயத்தை கெஜட்டில் பிரசுரித்து சற்று விசேஷ வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு கவர்ன்மெண்டார் அவ்விதம் அளிக்க முடியாதெனக் கூறி விட்டனர். வைஸ் ராயின் அதிகாரம் வெகு பேஷா யிருக்கின்றது. கெஜட்டில் பிரசுரிக்காததே அம்மசோதாக் களுக்கு அதிகப் பிரசாரம் நடந்து விட்டதாக கருத வேண்டி யிருக்கிறது.

" அரசியல் கைதிகளையும், காந்தியையும் உடனே விடுதலை செய்து விட வேண்டும். இந்தியா மந்திரி சபை தொலைய வேண்டும், இராணுவப் பொறுப்பு இப்பொழுதே வேண் டும், சர்ச்சில், லார்டு லாயிட் முதலியவர்கள் விஷயத்தில் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்" என்று சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த மிதவாதிக் கூட்டத்தில் தீர்மானித்தனர்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.